# வணிகக்கல்வி

## வணிகத்தின் அடிப்படைகளும் வணிகச் சூழலும்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

தேர்ச்சிமட்டம் 1.1

# வணிகத்தின் அடிப்படைகளும் வணிகச் சூழலும்

## வணிகம்

இலாபத்தைப்பெறும் நோக்கில் நடத்திச் செல்லப்படுவதும் மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பொருட்கள்,சேவைகளை உற்பத்திச் செய்தல் , விநியோ-கித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளையும் வணிகம் எனப்பொதுவாக வரைவிலக்கணப்படுத்த முடியும்.

இலாப நோக்கமின்றி மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நடத்திச் செல்லப்படும் வணிகங்களும் காணப்படுகின்றன.

இதற்கமைய மேற்கூறிய விடயங்களிலிருந்து வணிகம் என்பதற்கு பொதுவான வரைவிலக்கணமொன்றை பின்வருமாறு வழங்கலாம்.

NOTE :

**“மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் வணிகமாகும்”**

## தேவைகள்

மனிதனால் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய உடல், உள நிலைமைகளே மனிதத் தேவைகள் எனப்படும்

**தேவைகளின் பண்புகள்**

1. வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டியது
2. சகலருக்கும் பொதுவானது
3. வரையறைக்குட்பட்டது
4. முதல் நிலைக்குரியது
5. சமூக சக்திகளால் மாற்றப்பட முடியாதது
6. வணிகங்களால் தோற்றுவிக்க முடியாது

**உதாரணம் —:**

உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து, பாதுகாப்பு

தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)
கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விருப்பங்கள்

மனிதத் தேவைகள் பூர்த்திசெய்து கொள்ளப்படுகின்ற பல்வேறு முறைகள் விருப்பங்கள்

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான குறித்த பொருள் அல்லது சேவை மீதான ஆசை விருப்பம் எனப்படும்

தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளும் பல்வேறு தெரிவுகள் விருப்பங்கள் எனலாம்

### விருப்பங்களின் பண்புகள்

1. வரையறுக்கப்படாதிருத்தல்
2. நபர்களுக்கிடையே பல்வேறுவகைப்பட்டதாக இருத்தல்
3. அத்தியாவசிமானதல்ல
4. வணிகர்களால் தோற்றுவிக்க முடியுமாக இருத்தல்
5. இரண்டாந்தரமானது
6. சமூகத்தாக்கங்களால் மாற்றம் செய்ய முடிதல்

**உதாரணம் —:**

சோறு, பாண், இடியப்பம், தேனீர்

### தேவைகள், விருப்பங்களுக்கான உதாரணங்கள்

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| உணவு | சோறு, பாண், இடியப்பம், நூடில்ஸ் |
| உடை | சேலை, காற்சட்டை, சட்டை, வேட்டி |
| வீடு | மாடிவீடு, விடுதி, குடிசை, உத்தியோகபூர்வ இல்லம் |
| கல்வி | பாடசாலைக் கல்வி, பிரிவெனாக் கல்வி, தனியார்பாடசாலை, சர்வதேச பாடசாலை |
| சுகாதாரம் | ஆரச வைத்தியசாலை, தனியார் வைத்தியசாலை, மருந்துவகை, மருத்துவ பரிசோதனை |
| தொடர்பாடல் | தொலைப்பேசி, தொலைநகல், மின் அஞ்சல், வலையமைப்பு வசதிகள் |
| பாதுகாப்பு | பொலிஸ் படை, இராணுவ பாதுகாப்பு, தனியார் பாதுகாப்புச் சேவை |
| போக்குவரத்து | பேருந்து, புகையிரதம், மகிழுந்து, முச்சக்கரவண்டி |
| பொழுதுபோக்கு | புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல் |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தேவைகள் , விருப்பங்களுக்கு இடையிலான வேறுபாடு

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| வரையறுக்கப்பட்டது | வரையறுக்கப்படாதது |
| சகலருக்கும் பொதுவானது | தனிநபர்களுக்கிடையே வேறுபட்டதாக காணப்படும் |
| வாழ்வதற்கு கட்டாயமாக பூர்த்திசெய்யப்படல் வேண்டும் | வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்ய தேவையற்றது |
| வணிகங்களால் தோற்றுவிக்க முடியாது | வணிகங்களால் தோற்றுவிக்கமுடியும் |
| சமூகத் தாக்கங்களினால் மாற்றம் செய்ய முடியாதது | சமூக தாக்கங்களால் மாற்றம் செய்ய முடியும் |
| முதன்மையானது | இரண்டாந்தரமானது |

## உற்பத்தி

- ⇒ மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு முன்வைக்கப்படும் எந்தவொன்றும் உற்பத்தியாகும்.
- ⇒ தேவைக்கான தீர்வு உற்பத்தியாகும்.
- ⇒ உற்பத்தியினை பிரதானமாகப் பொருட்கள், சேவைகள் என வகைப்படுத்தப்படும்.
- ⇒ மனித தேவைகள்,விருப்பங்கள் பொருட்கள் சேவைகளின் மூலமே நிறைவேற்றப்படுகின்றது.

**பொருட்கள்**

மனித தேவைகளையும் , விருப்பங்களையும் பூர்த்திசெய்து கொள்வதற்காக பயன்படுத்தப்படுவதும் உருவம் உடையதும் தொட்டுணரக்கூடியதுமானவை பொருட்கள் எனப்படும்.

**உதாரணம்**

தளபாடம்,புத்தகம்,தொலைக்காட்சி,வானொலி





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருட்களின் பண்புகள்

- ⇒ பௌதீக நிலைப்புத்தன்மை கொண்டது
- ⇒ உருவம் உடையது
- ⇒ சேமித்து களஞ்சியப்படுத்த முடியும்
- ⇒ ஓரினத்தன்மை கொண்டதாக உற்பத்தி செய்யமுடியும்
- ⇒ வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும்

## சேவைகள்

**மனிதத்தேவைகளையும் , விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காக ஒரு கட்சியினரிடமிருந்து இன்னுமொரு கட்சியினருக்கு வழங்கப்படுவதும் உற்பத்தியாளரிடமிருந்து பிரிக்க முடியாததும், கட்புலனாகாததுமான எந்தவோர் உற்பத்தியும் சேவை எனப்படும்.**



## சேவைகளின் பண்புகள்

- ⇒ பௌதீக நிலைப்புத்தன்மையற்றது.
- ⇒ சேமித்து களஞ்சியப்படுத்த முடியாதது.
- ⇒ உருவம் அற்றது.
- ⇒ வழங்கும் நபர்களின் தன்மைக்கு ஏற்ப மாறும் தன்மையுடயவை.
- ⇒ வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாதது.


## பொருட்கள், சேவைகளுக்கு இடையிலான வேறுபாடு

| பொருட்கள் | சேவைகள் |
|---|---|
| பௌதீக நிலைப்புத்தன்மை கொண்டது. (தொட்டுணரக்கூடியது) | பௌதீக நிலைப்புத்தன்மை அற்றது. |
| களஞ்சியப்படுத்த முடியும். | களஞ்சியப்படுத்த முடியாதது. |
| ஓரினத்தன்மை கொண்டதாக இருக்குமாறு உற்பத்தி செய்ய முடியும். | வழங்குனர்களுக்கேற்ப வேறுபடும். |
| வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும். | வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாது. |

தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## சந்தை

⇒ கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்திக்கின்ற அல்லது தொடர்புபடுகின்ற எந்தவொரு நிலைமையும் சந்தை எனப்படும்.

⇒ மனித தேவைகள்,விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தையினூடாக பொருட்கள், சேவைகள் வழங்கப்படுகின்றன.

### வணிகங்களின் பண்புகள்

1) விற்பனை அல்லது பறிமாற்றம் இடம்பெறல்.
2) பொருட்கள்,சேவைகளினது கொடுக்கல், வாங்கல் இடம்பெறல்.
3) தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் இடம்பெறல்.
4) இலாபத்தினால் ஊக்கப்படுத்தப்படல்.
5) நட்ட இடர் காணப்படல்.
6) விருப்பங்களை தோற்றுவித்தல்.
7) பொருளாதார கருமமொன்றாக இருத்தல்.

தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்

பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமானத்தின் அடிப்படையில் விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறுவதனூடாக வணிகநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருட்கள் சேவைகளை விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்தலும்,விற்பனை செய்தலும் இடம்பெறுவதென்பது வணிகங்களின் அத்தியாவசிய தேவையொன்றாகும் அவ்வாறு விற்பனை அல்லது பரிமாற்றம் நடைபெறாத போது வணிக நடவடிக்கைகள் இடம்பெறாது.

**உதாரணம்**

வீடொன்றில் குடும்பத்தின் தேவைக்காக உணவு தயாரித்தல் வணிகமொன்றாக கருதப்படாத அதேவேளை குறிப்பிட்ட விலையில் ஏனையோருக்கு விற்பனை செய்வதற்காக உணவு தயாரித்தல்,விற்பனை செய்தல் வணிகமாகக் கருதப்படும்.

## பொருட்கள்,சேவைகளினது கொடுக்கல், வாங்கல் இடம்பெறல்

அனைத்து வணிகங்களும் ஏனையோர்களுக்கு விற்பனை செய்வதற்காக பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தலை மேற்கொள்கின்றன. அவை நுகர்வு பொருட்களாக அல்லது கைத்தொழில் (வணிகம்) பொருட்களாக இருக்க முடியும்.

இறுதிநுகர்வோனின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் நுகர்வுப் பொருட்களாகும்.

**உதாரணம்**

பாண்,ஆடை,பாதணிகள்

நுகர்வு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அல்லது உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்துவதற்கான பொருட்கள் கைத்தொழில்(வணிகம்) பொருட்கள் எனப்படும்.

**உதாரணம்**

மூலப்பொருட்கள், இயந்திரம்

சேவைகளாக மின்சாரம், காப்புறுதி, தொடர்பாடல் ,வங்கி என்பவற்றை குறிப்பிடலாம்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் இடம்பெறல்

தொடர்ச்சியான அடிப்படையில் பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுமாயின் அதனை வணிகம் என குறிப்பிட முடியும், ஒரு கொடுக்கல் வாங்கல் மாத்திரம் இடம்பெறுமாயின் அது வணிகம் அல்ல.

**உதாரணம்**

தனி நபர் ஒருவர் தான் பயன்படுத்திய மோட்டார் வாகனத்தை விற்பனை செய்தல் வணிகமாக கருதப்படாத அதே வேளை குறித்த நபர் தொடர்ச்சியாக மோட்டார் வாகன விற்பனையில் ஈடுபடுவாராயின் அது வணிகமாக கருதப்படும்.



## இலாபத்தினால் ஊக்கப்படுத்தப்படல்

வணிகமொன்றின் அடிப்படை நோக்கம் பணம் உழைப்பதும் செல்வம் சேர்ப்பதுவுமாகும். இவற்றை விட வணிகக் கருமங்களை கட்டியெழுப்புதல்,வணிக வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளல், சமூக நலன்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற அனுகூலங்களைப் பெறவும் வணிகங்கள் செயற்படுகின்றன.

இதனடிப்படையில் வணிகத்துறையானது இலாபத்தை நோக்காக கொண்டிருப்பதைப் போன்றே இலாபத்தை நோக்காக கொள்ளாது மேலே குறிப்பிட்ட அனுகூலங்களை நோக்காகக் கொண்ட வணிகங்களும் காணப்படுகின்றன. வணிகமொன்றின் விருத்திக்கும் விரிவாக்கத்திற்கும் இலாபம் அவசியமாக காணப்படுகின்றது.

தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இடர் காணப்படல்

இலாபத்தைப் பெறுவதற்காக நிச்சயமற்ற தன்மை,நட்டம் ஏற்படக் கூடிய நிலைமை போன்றவற்றிற்கு வணிகங்கள் முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

பின்வரும் விடயங்கள் காரணமாக வணிகங்களில் இடர் அல்லது நிச்சயமற்ற நிலைமை உருவாகும்.

- நுகர்வோரின் சுவை, பொருளின்வடிவம்,கேள்வி என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள்.
- இயந்திர உபகரணங்கள், உற்பத்தி தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்கள்.
- சந்தையில் போட்டித்தன்மை அதிகரித்தல்.
- மூலப்பொருள் பற்றாக்குறை,மின்சாரம் தடைப்படல்,எரிபொருள் பற்றாக்குறை.
- ஊழியர்களின் வேலைச் சூழல் சார்ந்த பிரச்சினை,வேலை நிறுத்தம் போன்றவை
- கள்வர்,பகைவர் இடையூறுகள்,தீப்பிடித்தல்,விபத்துக்கள் போன்ற அழிவுகள் காரணமாக
- வணிகத்தின் வளப்பாவனை தொடர்பான முகாமைத்துவத்தின் பிழையான தீர்மானம்

## விருப்பங்களை தோற்றுவித்தல்

மனித விருப்பங்களை நிறைவு செய்வதற்காக வணிகங்கள் பின்வரும் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

- பொருட்களை உற்பத்தி செய்தல்.
- மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றுதல்.
- சிலவகை பொருட்களை பிரிதோர் இடத்திற்கு கொண்டுசென்று விற்பனை செய்தல்.
- சிலவகை பருவகாலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் விநியோ-கிப்பதற்காக அப்பொருட்களின் அறுவடை காலங்களில் அவற்றை சேகரித்து களஞ்சியப்படுத்தி வைத்து விற்பனை செய்தல்.

இவ்வாறு சகல வணிகங்களும் பொருட்களை உற்பத்தி செய்தல்,சேவைகளை வழங்குதல் என்பவற்றினூடாக மனித விருப்பங்களை தோற்றுவிக்கின்றன.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருளாதாரக்கருமமொன்றாக இருத்தல்

அருமையாக காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக வணிகம் பிரதானமாக பொருளாதாரக் கருமமொன்றாக கருதப் படுகின்றது.

## வணிகமொன்றின் பிரதான கருமங்கள்

⇒ மனித தேவைகள்,விருப்பங்களை நிறைவு செய்தல்.

⇒ வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல்.

பொருளொன்றை அல்லது சேவையொன்றை உற்பத்தி செய்யும்போது பயன்படுத்தப்படுகின்ற வளங்களின் தன்மையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் அப்பொருளில் ஏற்படுகின்ற பெறுமதி அதிகரிப்பு சேர்க்கப்பட்ட பெறுமதி என்றழைக்கப்படும்.

வணிகச் செயற்பாடுகள் காரணமாக வளங்களின் தன்மையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அவ்வளங்களின் பெறுமதியை அதிகரிக்கச்செய்யும்.

உதாரணம்

- மேசை ஒன்றினை உற்பத்திச் செய்யும் போது மரத்தினைப் பெற்றுக்கொள்ளல், பலகைகளை உற்பத்தி செய்தல், மேசையினைத் தயாரித்தல் என்ற வகையில் பல உற்பத்திச் செயத்முறைகள் மேற்கொள்ளப்படும்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட பெறுமானம் ஒன்று சேர்க்கப்படுகின்றது.


⇒ இவ்வாறு வளங்களுக்கு பெறுமதிகளைச் சேர்த்தல் வணிகமொன்றில் இடம்பெறும் முக்கிய கரும மொன்றாகும்.



தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பு

1. மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
2. புத்துருவாகம்
3. தொழில் உருவாக்கம்
4. தேசிய பொருளாதார விருத்தி

தொகுப்பு - திருமதி. வினோதினி செல்வகுமார் ஆசிரியர் (யா/நாவற்குழி ம.வி, கைதடி)
கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk